2010 ஏப்ரல் 21]

தொடர்ந்து செய்வார்கள் என்ற நம்பிக்கையையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

79—

புறவழிச் சாலை

***4423—திரு. தா. உதயசூரியன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம் ஆகிய நகரங்களில் புறவழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கள்ளக்குறிச்சி நகரத்திற்கு ரூ.35.17 கோடி செலவில் 5.100 கிலோ மீட்டர் நீளமுள்ள புறவழிச் சாலையும், சின்னசேலம் நகரத்திற்கு ரூ.37.94 கோடி செலவில் 4.600 கிலோ மீட்டர் நீளமுள்ள புறவழிச் சாலையும் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற இந்தச் செய்திக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு,

[2010 ஏப்ரல் 21

விழுப்புரம் நெடுஞ்சாலைத் துறை ஆய்வு நடத்த வருகை தருகின்றபோது, அவரை நேரடியாக அழைத்துச் சென்று, வளர்ந்திருக்கின்ற கள்ளக்குறிச்சி நகராட்சிக்கும், சின்னசேலம் பேரூராட்சிக்கும், தியாகதுருகம், சங்கராபுரம் போன்ற பகுதிகளுக்கும் வாகனங்கள் அதிகமாக வருவதைச் சுட்டிக்காட்டி, சர்க்கரை ஆலையைத் தொடங்க வருகின்றபோது, 6 மாத காலத்திற்கு நிறைய டிராக்டர்களில் கரும்பேற்றி வருவதையும் சுட்டிக்காட்டி, அதேபோல 4 கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன, 246 வாகனங்கள் இருக்கின்றன; ஒரே குறிப்பிட்ட நேரத்தில் 8 மணி அளவில் அந்தப் பள்ளிகள், கல்லூரிகளுக்கெல்லாம் மாணவ, மாணவிகள் செல்லுகின்றபோது கள்ளக்குறிச்சியே ஸ்தம்பிக்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது, ஆகவே அதற்கு மாற்று வழி வேண்டும் என்று அமைச்சர் அவர்களுக்கு அந்த இடத்தையும் நான் காட்டியிருக்கின்றேன். எங்களுடைய மாவட்ட அமைச்சர், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே பெருவங்கூரில் கள்ளக்குறிச்சி ஏ.கே.டி. மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு அருகிலிருக்கின்ற பெருவங்கூரிலிருந்து சிறுவங்கூர் வரை 3 கிலோ மீட்டர் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலையும், சிறுவங்கூரிலிருந்து கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், திருவண்ணாமலைச் சாலையினை இணைக்கின்ற வகையில் 3 கிலோ மீட்டர் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலையும், மாமாந்தூரிலிருந்து அலம்பலம் வரை 5 கிலோ மீட்டர் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலையும் அமைத்து, அலம்பலத்திலிருந்து சடையம்பட்டு மார்க்கமாக கோமுகி ஆற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் கட்டினால் அதன் வழியாகக் கரும்பு வண்டிகளும் செல்வதற்கும், இதர கிராமங்களுக்குச் செல்கின்ற மக்களும் கள்ளக்குறிச்சியைத் தொடாமலும் செல்வதற்கும் நல்ல வாய்ப்பாக அமையும். ஆகவே, அமைச்சரிடம் நேரடியாகவும் விளக்கியிருக்கின்றேன். அந்த இடத்தையும் பார்த்திருக்கின்றார்கள். இந்தப் புதிய வழிச் சாலை இப்போது 375 மீட்டர் அகலமுள்ள ஒரு வழிச் சாலையாக இருக்கின்றது. ஆகவே, இதை 7 மீட்டர் அகலமுள்ள இரு வழிச் சாலையாக மாற்றி, தரத்தை உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வினாவிற்கான விடையை ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன். அது தேசிய நெடுஞ்சாலை 68; அதாவது சேலம்-உளுந்தூர்பேட்டை சாலை என்கிற சாலை. சேலம்-ஆத்தூர்-சின்னசேலம்-கள்ளக்குறிச்சி வழியாக உளுந்தூர்பேட்டை பகுதியை இணைக்கக்கூடிய சாலையாக அமைந்திருக்கிறது. இதிலே சின்னசேலம்-கள்ளக்குறிச்சிக்கும் இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையத்தின்மூலமாக சேலம் முதல் உளுந்தூர்பேட்டை வரை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்துகிற பணி நடைபெறுகிறது. சின்னசேலம்-கள்ளக்குறிச்சி நகரங்களுக்கான புறவழிச் சாலை 10 மீட்டர் அகலம் கொண்ட சாலையாக, அதாவது 7 மீட்டர் அகலமும், இரு ஓரங்களிலும் கடின புருவங்களுடைய தளமாகவும் அமைக்கப்பட்டு அது 10 மீட்டர் அகலம் கொண்ட சாலையாக அமைக்கப்படுகிறது. இந்தச் சாலை அமைக்கும் பணி முடிவுற்று போக்குவரத்தை அதிலே மாற்றி விடுகிறபோது ஓரளவுக்கு சின்னசேலத்திலும், கள்ளக்குறிச்சியிலும் போக்குவரத்து நெரிசல் குறைய வாய்ப்புண்டு. ஏற்கெனவே நான் விழுப்புரம் மாவட்டத்திற்குச் சென்றிருந்த நேரத்திலே, இரண்டு மூன்று முறை நம்முடைய மாண்புமிகு உறுப்பினரும், அங்கிருக்கக்கூடிய நம்முடைய நிருவாகிகளும் உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகளும் புறவழிச் சாலைகள் அமைக்கும்படி எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். நானும் அந்த இடங்களை எல்லாம் நேரில் பார்வையிட்டிருக்கிறேன். இந்தப் புறவழிச் சாலை அமைக்கும்பட்சத்திலே, விடுபடுகிற அந்த தேசிய நெடுஞ்சாலை, நகரப் பகுதியிலே இருக்கக்கூடிய அந்த தேசிய நெடுஞ்சாலை, மாநில அரசிடம் ஒப்படைக்கப்படும். எனவே, அந்தச் சாலையை அதற்குப் பிறகுதான் நாம் மேம்பாடு செய்ய இயலும். அதிலே உயர்மட்ட பாலங்கள் கட்டுகின்ற பணியையோ அல்லது அந்தச் சாலையிலே மேலும் விரிவாக்கம் செய்கிற பணியையோ மாநில அரசுமூலம் நாம் மேற்கொள்ள முடியும்.

அதேபோல, புறவழிச் சாலையாக இருக்கக்கூடிய சாலைகளையெல்லாம் அகலப்படுத்த வேண்டுமென்று சொல்கிறார். கள்ளக்குறிச்சிக்கு இன்னும் ஒரு புறவழிச் சாலை தேவைப்படும் என்று கேட்டிருக்கிறார்கள். நிதிநிலைக்கேற்ப நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அந்தச் சாலைகளையெல்லாம் விரிவாக்கம் செய்வதற்கும்,

[2010 ஏப்ரல் 21

இன்னும் கள்ளக்குறிச்சி, சின்னசேலம் நகர்ப் பகுதியில் இருக்கக்கூடிய போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும் மாநில அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

முற்பகல் 10-20

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னசேலம்-கள்ளக்குறிச்சி சாலையிலுள்ள இந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்குச் செல்கின்ற வாகனங்களும், கிராமப்புறத்திலே செல்கின்ற மக்களும் கள்ளக்குறிச்சி நகரத்திற்கு வராமல் செல்வதற்கு உலகங்காத்தானிலிருந்து 2 கிலோ மீட்டரும், ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான சாலை; அதைப்போல குதிரைச் சந்தையிலிருந்து கள்ளக்குறிச்சி கச்சிராயப்பாளையம் சாலைக்கு 4 கிலோ மீட்டரும், மொத்தம் 7 கிலோ மீட்டர்தான் இருக்கிறது. அதனுடன் சேர்த்து 2 கிலோ மீட்டர் சர்க்கரை ஆலைக்குச் செல்கின்ற சாலையை அமைத்தால் அருகில் இருக்கின்ற அந்த ஆலைக்கு இந்தக் கரும்பு வண்டிகள் கள்ளக்குறிச்சி நகரத்திற்கு வந்து நெரிசலை உருவாக்காமல் இருப்பதற்கு வாய்ப்பாக அமையும். ஆகவே, ஊராட்சி ஒன்றியத்தின்மூலமாக நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர், நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற இந்த நல்ல வேளையில், சாலை சீராக இருக்கின்றது; அதுவும், 3.75 மீட்டர் ஒருவழிச் சாலையாகத்தான் இருக்கிறது; நெடுஞ்சாலைத் துறையே இந்தச் சாலையை எடுத்துக்கொண்டு 7 மீட்டர் அகல இருவழிச் சாலையாக மாற்றித் தந்தால், நெரிசலைக் குறைப்பதற்கு நல்ல வாய்ப்பாக அமையும் என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஏற்பாடு செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியச் சாலையை அகலப்படுத்தினால் போக்குவரத்து நெரிசல் குறையும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாக, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகளும் இருப்பதையும்

2010 ஏப்ரல் 21]

குறிப்பிட்டிருக்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறையில் இருக்கக்கூடிய சாலைகளை நேரடியாக அரசு ஒதுக்குகிற நிதியை வைத்து மேம்பாடு செய்து விடலாம். ஊராட்சி ஒன்றியச் சாலையை நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி நேரடியாக நாங்கள் எடுத்துக்கொள்ள இயலாது. அங்கு இருக்கக்கூடிய, எந்த உள்ளாட்சி அமைப்புக்குச் சொந்தமான சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைப்பதற்கு உள்ளாட்சி அமைப்பினர் தீர்மானம் நிறைவேற்றி, அதற்கு பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் வழியாக அந்தத் துறையினுடைய செயலர் வரைக்கும் வந்து, அந்த துறையினுடைய அமைச்சரான மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்குச் சென்று, அதற்குப் பிறகு, இறுதியாக நிதித் துறை அமைச்சரின் ஒப்புதல் பெற்றுதான் அந்தச் சாலையை நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொண்டு, அதை மேம்பாடு செய்ய முடியும். அதுவும், நிதிநிலைமைக்கேற்ப நிதித் துறை ஒப்புதல் தந்தால்தான், அந்தப் பணியை மேற்கொள்ள முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ஏற்படும்பட்சத்தில் அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

80—

காலணி அலகு

***107893—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் வட்டம், நத்தக்காடையூர், குட்டப்பாளையம், நல்லம்மாள்புரம் பகுதிகளுக்குத் தமிழ்நாடு கதர்த் துறைமூலம் காலணி அலகு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS